**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்போரூர்**

**DEPOSITION OF WITNESSES**

(Chapter XXIII Cr.P.C)

**CC No.167/2024**
**PW.1**
**Date: 26.06.2025**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ஜெகன்மோகன் ரெட்டி | சாதி | |
| கணவர்/தந்தை பெயர் | லோகேஷ்வரன் | மதம் | |
| கிராமம் | புத்தூர் | தொழில் | |
| வட்டம் | ஆந்திரமாநிலம் | வயது | 27 |

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act 1969, (Central Act 44 of 1969) on the **26th day of June, 2025**

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

**முதல் விசாரணை**

1. நான் இத்தனி நபர் புகாரின் புகார்தாரர் ஆவேன். நான் இவ்வழக்கில் புகார்தாரர் ஆவேன். நான் பையநுரில் உள்ள AVIT கல்லூரியில் முதல் நிலை மற்றும் மேல்நிலை பட்டையப்படிப்பு கடந்த ஆண்டு படித்து முடித்தேன். என்னுடைய கல்லுரியின் பேராசிரியரான எதிரி கேளம்பாக்கம் அக்ஷயா குடியிருப்பில் ஒரு வீடு வைத்திருந்தார். அதன் மதிப்பு ரூ.25,00,000/- என்று சொன்னார். கடைசியில் ரூ.21,00,000/- என்று முடிவு செய்து கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தி கொண்டோம். தற்போது என்னிடம்

காட்டப்படும் கிரைய ஒப்பந்தம் அது தான். **(02/02/2024 தேதியிட்ட கிரைய உடன்படிக்கை ஆவணம் பு.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

2. நான் ரூ.11,65,000/-ஐ காசோலையாக கொடுப்பதாக சொன்னதற்கு வரி பிரச்சனை ஏற்படும் என்றும் அதனால் ரொக்கமாக பணத்தை கொடுக்க வேண்டும் என்றும் சொன்னார். அதனால் நானும் இரண்டு முறை மொத்தமாக ரூ.11,65,000/- கொடுத்தேன். கிரைய ஒப்பந்தததில் பணத்தை ரொக்கமாக தான் வாங்கினேன் என்று குறிப்பிட்டு அவரும் கையொப்பம் செய்திருந்தார். அதன்பிறகு தன்னிடம் ரொக்கமாக பணத்தை கொடுக்கவில்லை என்று அவர் சொன்னார். மேலும் அந்த வீட்டிற்கு வங்கியில் கடன் உள்ளது என்று தெரியவந்தது. நான் அந்த வீட்டில் குடியிருக்கும் போதே வேறு ஒரு நபருக்கு விற்பனை செய்ய முயற்சித்துள்ளார். அவரிடம் அதைப்பற்றி கேட்ட பொழுது வேறு வீட்டை அவர்கள் பார்க்க வந்திருப்பார்கள் என்று சொல்லிவிட்டார்.

3. அதன் பிறகு தான் வங்கியில் கடன் உள்ள விவரம் எனக்கு தெரியவந்தது. கல்லூரியில் இந்த பிரச்சனை குறித்து தெரியவந்தது. அவரின் மேல் மற்ற கல்லுரி ஊழியர்களும், மாணவர்களும் பணம் கொடுக்கல் வாங்கல் சம்மந்தமாக புகார்கள் கொடுத்திருந்தார்கள். எனக்கு பணத்தை திருப்பி கொடுத்துவிடுவதாகவும், பணத்தை ஏற்பாடு செய்வதாகவும் சொன்னார். ஆனால் என்னிடம் மீதி பணத்தை ஏற்பாடு செய்யுங்கள் நான் வீட்டை பதிவு செய்து தருகிறேன் என்று சொன்னார். ஆனால் காலதாமதம் செய்து வந்தார். 1 மாதம் ஆகியும் அவர் பணத்தை தரவில்லை, வங்கி கடனையும் திருப்பி செலுத்தவில்லை. மே 10ம் தேதி நான் கல்லூரிக்கு தேர்விற்காக

சென்ற போது என்னை தேர்வு எழுத விடாமல் அலைபேசியில் அழைத்து கொண்டிருந்தார். தேர்வு முடித்து வெளியே வந்தபோது என் அப்பாவும் என்னுடன் இருந்தார்.அப்போது எதிரியும் D.செந்தில்குமார் என்ற ஒரு நபரும் மற்றும் இரண்டு நபர்களும் கல்லூரிக்கு வந்து புகார் கொடுக்க கூடாது என்றும் அவ்வாறு புகார் கொடுத்தாலும் என்னை ஒன்றும் செய்ய முடியாது என்று சொன்னார்கள்.

4. அதன்பிறகு நான் ஊருக்கு சென்று இரண்டு நாட்கள் கழித்து வந்து காவல் ஆணையரிடம் 13.06.2024 அன்று புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நகல் அது தான்.(**13/06/2024 தேதியிட்ட புகார் நகல் பு.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** ஆனால் காவல் நிலையத்தில் விசாரணை எதுவும் செய்யவில்லை. எதிரி காவல் நிலையத்திற்கு வராமல் காலம் தாழ்த்தி வந்தார். இது பற்றி எனது கல்லூரியில் தெரிவித்தேன். கல்லூரியில் இருந்து அவரை பணிநீக்கம் செய்துவிட்டார்கள். என்னுடைய பொருட்கள் அந்த குடியிருப்பில் உள்ளதா என்று தெரியவில்லை. நான் கொடுத்த புகார் சம்பந்தமாக 27/07/2024 அன்று சமுதாய சேவைபதிவேடு வழங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் சமுதாய சேவைபதிவேடு அது தான். (**27/07/2024 தேதியிட்ட சமுதாய சேவை பதிவேடு பு.சா.ஆ. 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**

5. என்னுடைய பொருட்களை எடுப்பதற்காக ஒரு போலிசாருடன் அன்று அந்த குடியிருப்புக்கு சென்றேன். ஆனால் வேறு ஒருவர் இருந்தார். அவரை விசாரித்தபோது அங்கு குடியிருந்த கல்லூரி மாணவர்கள் வாடகை கொடுக்காமல் ஓடிவிட்டதாக எதிரி அவரிடம் சொல்லியுள்ளார். நான் என்னை அறிமுகம் செய்துகொண்டு என்னுடைய

பொருட்களை எடுத்து கொள்கிறேன் என்று சொன்னேன். ஆனால் அவர் என்னை அனுமதிக்கவில்லை. எனவே எனது பொருட்களும் எதிரியிடம் தான் உள்ளது.இந்நிலையயில் நான் கல்லூரியில் தேர்வு எழுதிவிட்டு வரும்போது எதிரி என்னிடம் காவல் நிலையத்திற்கு செல்லகூடாது என்றும் புகார் ஏதும் கொடுக்ககூடாது என்றும் என்னுடைய கல்லுரியில் இருந்து சான்றிதழ்கள் பெற முடியாது என்றும், ஊர் போய் சேரமுடியாது என்று மிரட்டினார்.

6. எனவே நான் 13/06/2024 அன்று மீண்டும் காவல் ஆணையர் அலுவலகத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். (**13/06/2024 தேதியிட்ட புகார் பு.சா. ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) போலிசார் நடவடிக்கை எடுக்கவில்லை. எனவே எதிரியின் மீது நடவடிக்கை எடுப்பதற்காக இத்ததனி நபர் புகாரை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். எதிரி மீது விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுத்து உரிய உத்தரவு பிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

S/d- K.Nilavarasan, 26.06.2025
District Munsif cum Judicial Magistrate,
Thiruporur.